දුරකථන) 0112669192 , 0112675011
தொலைபேசி) 0112694033 , 0112675280
Telephone) 0112675449

ෆැක්ස්) 0112693866
பெக்ஸ்) 0112693869
Fax) 0112692913

විද්‍යුත් තැපෑල) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி)
e-mail)

වෙබ් අඩවිය) www.health.gov.lk
இணையத்தளம்)
website)

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය)
எனது இல) HPJ/06/2019/Vol.I
My No.)

ඔබේ අංකය)
உமது இல)
Your No.)

දිනය)
திகதி) 2025.06.30
Date)

සෞඛ්‍ය හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு

Ministry of Health & Mass Media

பொது சுற்றறிக்கை இலக்கம்: 01-32/2025

அனைத்து மேலதிக செயலாளர்கள்
அனைத்து பிரதிப் பணிப்பாளர் நாயகங்கள்
அனைத்து விஷேட திட்டங்களின் தலைவர்கள் / சுகாதார பராமரிப்பு நிறுவனங்களின் தலைவர்கள்
மத்திய அமைச்சின் கீழுள்ள அனைத்து வைத்தியசாலைகளின் தலைவர்கள்
அனைத்து மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
அனைத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்

"A" வகைக்குரிய பண்டாரவளை பிரதேச வைத்தியசாலையினை " B " வகைக்குரிய ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்துதல்

ஊவா மாகாண சுகாதார அமைச்சின் நிருவாகத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டாரவளை பிரதேச வைத்தியசாலை, பண்டாரவளை பிரதேச மக்களுக்கு மட்டுமன்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளுக்கும் இரண்டாம் நிலை சுகாதார சேவைகளை வழங்குவதற்கும் பொருட்டு அதன் சுகாதார பராமரிப்பு சேவைகளை விரிவுபடுத்துவதற்கான அவசியம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. இத் தேவைகளை நிறைவேற்று முகமாக "A" வகைக்குரிய பண்டாரவளை பிரதேச வைத்தியசாலை, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் " B " வகைக்குரிய ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்துவதற்கு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன் அடிப்படையில், இந்த வைத்தியசாலை, 2020.03.03 ஆம் திகதிய பொது சுற்றறிக்கை இலக்கம் 01 -18/ 2020 இல் குறிப்பிடப்பட்ட அடிப்படை விசேட சிகிச்சை சேவைகளான மருத்துவ, சத்திர சிகிச்சை, பெண் நோயியல் மற்றும் மகப்பேற்று, சிறுவர் நோய், மயக்க, மனநல நோய், கண் சத்திர சிகிச்சை, கதிரியல், நோய்க்குறியியல் (திசு நோயியல் உட்பட), தோல் நோய்கள், விபத்து மற்றும் அவசர சிகிச்சை போன்ற சேவைகள் வழங்கும் "B" வகைக்குரிய ஆதார வைத்தியசாலையாக மேம்படுத்தப்படும். அத்துடன், ஒருங்கிணைந்த ஆயுர்வேத மருத்துவ சேவை வசதிகளும் வழங்கப்படும்.

மேலும், இந்த வைத்தியசாலை ஊவா மாகாண சபை நிருவாகத்தின் கீழ் செயற்படுவதுடன், நிறுவனத் தலைவரின் பதவிப் பெயர் மருத்துவ அத்தியட்சகர் என பெயரிடப்படும்.

பண்டாரவளை பிரதேச வைத்தியசாலை, ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தி தியத்தலாவ ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து சிறந்த சுகாதார சேவைகளை மேற்கொள்ளல் என்ற தலைப்பில், 2024.06.10 ஆம் திகதியன்று இதற்கு முன் வெளியிடப்பட்ட பொது சுற்றறிக்கை இலக்கம் 01 - 21/ 2024 உடனடியாக அமுலாக்கப்படும் வகையில் இதன் மூலம் இரத்துச் செய்யப்படுகிறது என்பதை மேலும் அறியத்தருகின்றேன். இந்த புதிய பொது சுற்றறிக்கை அதன்படி அமுல்படுத்தப்படுகிறது.

இந்த முன்மொழியப்பட்ட நிறுவனம் தொடர்பான பிற தகவல்கள் பின்வருமாறு:

1. நிறுவனத்தின் பெயர் :-	ஆதார வைத்தியசாலை ("B" வகை) – பண்டாரவளை
2. நிர்வாக மாவட்டம் :-	பதுளை
3. தேர்தல் பிரிவு :-	பண்டாரவளை
4. பிரதேச செயலாளர் பிரிவு :-	பண்டாரவளை
5. அருகிலுள்ள நிர்வாக அலுவலகம் :-	பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - பதுளை
6. நிறுவனப் பொறுப்பதிகாரி :-	வைத்திய அத்தியட்சகர்
7. அறிக்கையிடும் அதிகாரி :-	பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் - பதுளை
8. தபால் மற்றும் தந்தி அலுவலகம் :-	பண்டாரவளை
9. அருகிலுள்ள புகையிரத நிலையம் :-	பண்டாரவளை
10. பொலிஸ் நிலையம் :-	பண்டாரவளை

Dr. ASELA GUNAWARDENA
Director General of Health Services
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha
Colombo 10.

டாக்டர் அசேல குணவர்தன
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள் :

1. கௌரவ ஆளுநர் - ஊவா மாகாணம்
2. பிரதான செயலாளர் - ஊவா மாகாணம்
3. செயலாளர் - சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு
4. மாகாண சுகாதார செயலாளர், ஊவா மாகாணம்
5. பிரதான நிதி அலுவலர் - I/ II/ III – சுகாதார அமைச்சு
6. பிரதான சட்ட அலுவலர் - சுகாதார அமைச்சு
7. வைத்திய அத்தியட்சகர் - ஆதார வைத்தியசாலை, பண்டாரவளை